பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
07 08 2025 THURSDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க மத்தியஅரசு தொடர்ந்து பாடுபட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- சுதந்திரப் போராட்ட காலத்தில், நாட்டு மக்களிடையே விடுதலை வேட்கையை ஊக்குவித்தவர் குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

- உதம்பூர் - பாரமுல்லா ரயில்பாதை, அப்பகுதியில் சமூக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தியுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

- இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

- ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள எரிமலை சீற்றம் காரணமாக. அந்நாட்டில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விவசாயிகளின் நலன்களை பாதுகாக்க மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ் சுவாமிநாதன் நூற்றாண்டை ஒட்டி, புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் பேசிய அவர், விவசாயிகளின் நலனில் இந்தியா ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது என்றார்.

சாகுபடி செலவைக் குறைத்து, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க அரசு தொடர்ந்து பாடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உணவு உற்பத்தியில் நாடு சுயசார்பு அடைவதற்கான இயக்கத்தை தொடங்கிய எம்.எஸ் சுவாமிநாதன், உயிர்ப் பன்மை பாதுகாப்பிற்கும் அளப்பரிய பங்களிப்பை வழங்கியிருப்பதாக புகழாரம் சூட்டினார்.

வேளாண் அறிவியல் துறையில் அவர் ஆற்றிய பணிகள் என்றும் போற்றத்தக்கது என்று குறிப்பிட்ட அவர், கடந்த பத்தாண்டுகளில் கைத்தறித் துறைக்கு புதிய அடையாளத்தை ஏற்படுத்தி. அத்துறையை வலுப்படுத்தியிருப்பதாகவும் கூறினார்.

சிறப்புக்குரிய பணிகளை ஆற்றிய எம்.எஸ் சுவாமிநாதனுக்கு தமது தலைமையிலான அரசு பாரத் ரத்னா விருது வழங்கி சிறப்பித்ததையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக, எம்.எஸ். சுவாமிநாதன் நூற்றாண்டு நினைவு நாணயம் மற்றும் அஞ்சல்தலையை வெளியிட்ட பிரதமர், வேளாண்துறையில் சாதனை படைத்தவர்களுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் விருதுகளையும் வழங்கினார்.

இந்த மாநாட்டில் பேசிய மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான், நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க தேசிய இயக்கம் செயல்படுத்தப்படுவதாக கூறிய அவர், வருங்கால சந்ததியினரின் நலனை கருத்தில் கொண்டு, மண்வளத்தை பாதுகாக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சக அறிவியலாளர்களுடன் இணைந்து மேற்கொண்ட கூட்டு முயற்சி மற்றும் வேளாண் கொள்கைகளின் காரணமாக, நாட்டின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை கண்டறிந்தவர் எம்.எஸ் சுவாமிநாதன் என்று தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

சுதந்திரப் போராட்ட காலத்தில், நாட்டு மக்களிடையே விடுதலை வேட்கை, சுயமரியாதை மற்றும் கலாச்சார உணர்வை ஊக்குவித்தவர் குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

ரவீந்திரநாத் தாகூர் நினைவு தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தலைசிறந்த இலக்கியவாதியான தாகூருக்கு அவரது நினைவு தினத்தில் மரியாதை செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தேசியகீதத்தை இயற்றிவரான ரவீந்திரநாத் தாகூர், இந்திய தத்துவங்களை உலகம் முழுவதும் பரப்பியவர் என்றும் திரு. அமித் ஷா புகழாரம் சூட்டியுள்ளார்.

மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி உள்ளிட்ட தலைவர்களும், ரவீந்திரநாத் தாகூரின் நினைவுதினத்தை ஒட்டி மரியாதை செலுத்தியுள்ளனார்.

>>>>>><<<<<<

நாடாளுமன்றம் தொடர்ந்து முடக்கப்பட்டு வருவது கவலை அளிப்பதாக உள்ளது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியல் சாசனம் மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு உட்பட்டு எந்த பிரச்சினை குறித்தும் விவாதிக்க அரசு தயாராக இருப்பதாக கூறினார்.

எனினும், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தொடர்பான வழக்கு, உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், அதுபற்றி அவையில் விவாதிக்க இயலாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், தேர்தல் ஆணையம் போன்ற தன்னாட்சி அமைப்புகளின் செயல்பாடு குறித்து, நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியாது என்று அவை விதிமுறைகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு. கிரண் ரிஜிஜு கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

உதம்பூர் – ஸ்ரீநகர் – பாரமுல்லா ரயில்பாதை, உலக தரத்திலான பாதுகாப்பு அம்சங்களுடன், இமயமலையின் இயற்கைச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில், அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், *Chenab* ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உலகின் மிக உயரமான ரயில் பாலத்தைக் கொண்ட இந்த வழித்தடம் நாட்டின் முதலாவது கம்பிவடங்களால் ஆன பாலமாகவும் திகழ்வதாக குறிப்பிட்டார்.

இந்த பாலம் அமைக்கும் பணியில் 5 கோடி மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டதுடன், 215 கிலோமீட்டர் தொலைவுக்கு அணுகுசாலைகள் அமைக்கப்பட்டதன் மூலம், அப்பகுதியில் போக்குவரத்து இணைப்பு வசதிகளை மேம்படுத்தி, சமூக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாக உள்ளது என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை சிறைகளில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் முதலமைச்சர் அந்தக் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், நெசவாளர்களுக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

நெசவாளர்களின் கைவண்ணம், துணிகளை நெசவு செய்வதோடு மட்டுமின்றி, நாட்டின் கைவினைத்திறன் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்தி. சுயசார்புக்கு வகை செய்வதாகவும் திரு. கிரிராஜ் சிங் குறிப்பிட்டுள்ளார்.

*இந்நாளையொட்டி, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனைக்கு ஏற்பாடு செய்ப்பட்டுள்ளது.*

*திருப்பூரில் நடைபெறும் கண்காட்சியில் பல்வேறு ரகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – சபரிஷ் 46 செகண்ட்ஸ்)*

*தமிழகத்தில் கைத்தறித்துறை 28 சதவீத அளவிற்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதுடன், கைத்தறி ஏற்றுமதி மூலம் அதிக வருவாய் ஈட்டித் தருவதாகவும் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கவுன்சிலின் இணை இயக்குநர் திரு. சுந்தர் முருகேசன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட்பைட் – சுந்தர் முருகேசன் 55 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*வாக்காளர் அடையாள அட்டையின் உண்மைத்தன்மை தொடர்பாக விளக்கமளிக்கக் கோரி, ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவிற்கு தேர்தல் ஆணையம் மீண்டும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.*

*திரு. தேஜஸ்வி யாதவ் செய்தியாளர் சந்திப்பில் காட்டிய அடையாள அட்டை, தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டது அல்ல என்று கூறி, ஆய்வுக்காக அதனை சமர்ப்பிக்குமாறு Digha சட்டப்பேரவை தொகுதி வாக்காளர் பதிவு அதிகாரி கடந்த 3ஆம் தேதி நோட்டீஸ் அனுப்பியிருந்தார்.*

*இதற்கு அவர் இதுவரை பதிலளிக்காத நிலையில், தற்போது மீண்டும் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள எரிமலை சீற்றம் காரணமாக. அந்நாட்டில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது.*

*அந்நாட்டின் Kamchatka தீபகற்பத்திற்கு உட்பட்ட Klyuchevskoy எரிமலையிலிருந்து வெடித்துச் சிதறும் தீப்பிழம்புகள் மற்றும் சாம்பல் 141 கிலோமீட்டர் சுற்றளவுக்கு பரவியுள்ளதாக அந்நாட்டு எரிமலை மற்றும் நிலநடுக்கவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

கடந்த 30ஆம் தேதி ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தொடர்ச்சியாக, இந்த எரிமலை சீற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக, Kamchatka பகுதியில் விமானங்கள் கவனத்துடன் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<